**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 14-05-2024**

**தி -நீல்கிரிஸ்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2024-05-14 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2024-05-15 | 2024-05-16 | 2024-05-17 | 2024-05-18 | 2024-05-19 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 35.0 | 14.0 | 38.0 | 36.0 | 36.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 21.0 | 20.0 | 20.0 | 19.0 | 18.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 14.0 | 13.0 | 12.0 | 12.0 | 11.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 100 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 60 | 70 | 80 | 70 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 4 | 2 | 2 | 4 | 5 |
| காற்றின் திசை (கோணம்) | 100 | 112 | 188 | 238 | 248 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 7 | 8 | 7 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் இருக்கும். முதல் இரண்டு நாட்களுக்கு மிதமான மழையும், அடுத்த மூன்று நாட்களுக்கு பலத்த மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 18- 21°செஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 11-14°செஆகவும் இருக்ககூடும். காலை நேர காற்றின் ஈரப்பதம் 90-100 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 60- 80 சதவிகிதமாகவும் இருக்ககூடும்.சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 02-05 கி.மீஅளவுக்கு வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது நாட்களில் பலத்த மழை பெய்யும் வாய்ப்பு உள்ளதால், காய்கறி சாகுபடி விவசாயிகள், காய்கறி வயலில் உள்ள உபரி நீரை வெளியேற்ற நல்ல வடிகால் வசதியை ஏற்படுத்த வேண்டும். விதைகளை ட்ரைக்கோடெர்மா விரிடு @ 4 கிராம்/கிலோ அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் @ 10 கிராம்/கிலோ கொண்டு விதை மற்றும் மண் மூலம் பரவும் நோய்க்கிருமிகளை கட்டுப்பாடுத்த விதை நேர்த்தி செய்யலாம். மேலும், எந்தவொரு பயிர் திட்டத்திற்கும் முன்பு மண் பரிசோதனை செய்யப்பட வேண்டும்.

## குறுஞ்செய்தி :

பீட்ரூட் பயிரில் இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்த, நடவு செய்த 45, 60 மற்றும் 75 நாட்களில் மான்கோசெப் @ 2 கிராம்/லி இலைகளில் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது. மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| முள்ளங்கி | கேரட்டில் நூற்புழு மேலாண்மைக்கு, நடவு செய்யும் போது எக்டருக்கு 1 டன் வேப்பம் பிண்ணாக்கு மண்ணில் இடவும். கடுகு செடிகளை உயிரி புகையாக்குதல் மற்றும் வேப்பம் பிண்ணாக்கு ஒரு ஹெக்டருக்கு 250 கிலோ இடுதல், பர்ப்யூரோசிலியம் லிலாசினம் @ 5 கிலோ/எக்டருக்கு பரிந்துரைக்கப்படுகிறது. மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும். |
| உருளைக்கிழங்கு | உருளைக்கிழங்கு பயிரில் ஏற்படும் இலை கருகல் நோயை கட்டுப்படுத்த, நடவு செய்த 45, 60 மற்றும் 75 நாட்களில், ஹெக்ஸகோனசோல் 2% எஸ்சி @ 0.06% அல்லது மான்கோசெப் @ 2 கிராம்/லி ஆர்க்ளோரோதலோனில் @ 2 கிராம்/லி ஆகியவற்றை இலைவழி தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது. மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும். |
| கருமிளகு | குருமிளகு வாடல் நோயைக் கட்டுப்படுத்த, விவசாயிகள் காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 0.2% (மண்ணை அள்ளுதல்) அல்லது பொட்டாசியம் பாஸ்போனேட் @ 0.3% அல்லது மெட்டாலாக்சில் @ 0.1% பயன்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது. மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும். |
| தேயிலை | தேயிலை பயிரில் சிலந்திப் பூச்சியை கட்டுப்படுத்த, அசாடிராக்டின் 1.0% இசி (வேம்பு அடிப்படையிலானது) 2.0 மிலி/லிட் அல்லது புரோபார்கைட்டு 57% இசி 2.0 மிலி/லிட் ஆகியவற்றைப் பயன்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது. மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும். |
| பூண்டு | பூண்டு குமிழ் விளைச்சலை அதிகரிக்க நடவு செய்த 30, 45 மற்றும் 60 நாட்களில் நீரில் கரையக்கூடிய நுண்ணூட்டச் சத்து கலவையை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.50 கிராம் என்ற அளவில் இலையில் இடலாம். பூண்டு பயிரில் இலைப்புள்ளி / ஊதா நிற கருங்கல் ஏற்படுவதை நிர்வகிக்க, மான்கோசெப் @ 2 கிராம்/லி அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 2.5 கிராம்/லி இலைவழி தெளிக்கவும். மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும். |